ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:
ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

# (27. ரேகா பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

**குறிப்பு** - பாதுகைகளில் காணப்படும் பல கோடுகளை இங்கே கூறுகிறார்.

811. ஸூசயந்தீம் ஸ்வரேகாபி: அநாலோக்ய ஸரஸ்வதீம்
அலேகநீய ஸௌந்தர்யம் ஆச்ரயே சௌரிபாதுகாம்

**பொருள்** - எழுதத்தகாத சொற்களைத் தெரியப்படுத்துவதாகவும், எழுதி முடிக்க இயலாத அழகைக் கொண்டதாகவும் உள்ள கோடுகளைத் தன்னிடம் கொண்டதான ஸ்ரீரங்கநாதனின் பாதுகையை நான் அடைகிறேன்.

**விளக்கம்** - வேதங்களை எழுதி வாசிக்கக் கூடாது என்பார்கள். அப்படிப்பட்ட வேதங்களே இந்தப் பாதுகையில் கோடுகளின் வடிவில் உள்ளன என்றார்.

812. மணி மௌளி நிகர்ஷணாத் ஸுரணாம்
வஹஸே காஞ்சந பாதுகே விசித்ரம்
கமலாபதி பாத பத்ம யோகாத்
அபரம் லக்ஷணம் ஆதிராஜ்ய ஸாரம்

**பொருள்** - தங்கமயமான பாதுகையே! தேவர்களுடைய கிரீடங்கள் உன்னை வணங்குவதற்காக அவர்கள் தலையைக் குனியும்போது, ஒன்றுடன் ஒன்று உராய்கின்றன. அப்போது அந்தக் கிரீடங்களில் உள்ள இரத்தினங்கள் ஒன்றுடன் ஒன்று உராய்வதால், ஸ்ரீரங்கநாதனின் திருவடிகள் உன் மீது ஏற்படுத்துகின்ற கோடுகளைக் காட்டிலும் வேறுவிதமான கோடுகள் உன்னில் ஏற்படுகின்றன. இந்தப் புதிய கோடுகள் மூலம் அனைத்து உலகிற்கும் நீயே ராணியாக உள்ளாய் என்னும் அடையாளத்தை அடைகிறாய்.

813. அபிதோ மணி பாதுகே ஸ்புரந்த்யா:
தவ ரேகாவிததே ததாவிதாயா:
முரவைரி பதாரவிந்த ரூடை:
அநுகல்பாயிதம் ஆதிராஜ்ய சிஹ்நை:

**பொருள்** - இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையே! தாமரை மலர் போன்ற ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில், "இவனே அனைத்து உலகங்களுக்கும் அதிபதி", என்பதை உணர்த்தும் கோடுகள் உள்ளன. உன் மீது தேவர்களின் க்ரீடங்கள் ஏற்படுத்திய

கோடுகளைக் காணும்போது, அவனது ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் உள்ள கோடுகள் இரண்டாம்படியாகவே உள்ளன (பாதுகையில் உள்ள கோடுகள் மூலமாகவே ஸ்ரீரங்கநாதனுக்கு அதிகாரம் கிடைக்கிறது, அவனது திருவடிகளில் உள்ள கோடுகளால் அல்ல என்றார்).

814. ரேகயா விநமதாம் திவௌகஸாம்
மௌளிரத்ந மகரீ முக உத்தயா
பாதுகே வஹஸி நூநம் அத்புதம்
சௌரிபாத பரிபோக லக்ஷணம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உன்னை வணங்கி நிற்கும் தேவர்களின் க்ரீடங்களில் காணப்படும் இரத்தினங்களால் செய்யப்பட்ட மீனின் முகத்தினால் உன் மீது கோடுகள் ஏற்படுகின்றன. இதனைக் காணும்போது நீ ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளுடன் சேர்ந்து அனுபவித்த இன்பத்தின்போது அந்த அடையாளத்தை ஏற்றாய் போலும்.

**விளக்கம்** - தேவர்களின் தலையில் உள்ள க்ரீடங்களின் மீன் வடிவ நகைகள் உண்டு. அவை பாதுகைகள் மீது மீன் வடிவத்தில் அச்சு உண்டாக்குகின்றன. ஸ்ரீரங்கநாதனின் திருவடியில் மகர உருவம் உண்டு. அந்தத் திருவடியை நாயகன் என்றும், பாதுகையை நாயகி என்றும் கொண்டால், இவர்கள் சேர்ந்துள்ளபோது திருவடியின் அரவணைப்பு காரணமாக அந்த மகர வடிவம் பாதுகையில் வந்ததோ என்கிறார். உண்மையில் அவை தேவர்களின் க்ரீடங்களால் வந்தவை ஆகும்.

815. த்ரிதச மகுட ரத்ந உல்லேக ரேகா: உபதேசாத்
பரிமணயஸி பும்ஸாம் பாதுகே மூர்த்நி லக்நா
நரகமதந ஸேவாஸம்பதம் ஸாதயித்ரீ
நியதி விலகிதாநாம் நிஷ்க்ருதிம் துர்லிபீநாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! நரகன் என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனுக்குக் கைங்கர்யம் செய்தல் என்பதையே செல்வமாக உண்டாக்கும் விதமாக, அனைத்து உயிர்களின் தலைகளில் நீ அமர்கிறாய். இதன் மூலம் நீ செய்வது என்னவென்றால் – தேவர்களின் க்ரீடங்களில் உள்ள இரத்தினங்கள் மூலம் உன்னில் உண்டாக்கிய கோடுகள் கொண்டு, மக்களுடைய விதியின் மூலம் அவர்கள் தலையில் எழுதப்பட்ட கெட்ட எழுத்துக்களை அழித்தல் என்பதைச் செய்கிறாய் (இதனால் கைங்கர்யச் செல்வம் ஏற்படுகிறது).

816. பதகமல தல அந்த: ஸம்ச்ரிதாநி ஆதபத்ர
த்வஜ ஸரஸிஜ முக்யாநி ஐச்வரீலக்ஷணாநி
அவகமயஸி சௌரே: பாதுகே மாத்ருசாநாம்
உபரி பரிணதை: ஸ்வை: தேவி ரேகாவிசேஷை:

**பொருள்** - பாதுகாதேவியே! ஸ்ரீரங்கநாதனின் திருவடித் தாமரைகளில், “இவனே ஸர்வேச்வரன்”, என்பதை உணர்த்தும் விதமாக குடை, தாமரை, கொடி போன்ற அடையாளங்கள் உள்ளன. இவற்றை அறியாத என்னைப் போன்றவர்களுக்காக இவற்றை உனது கோடுகளாகக் கொண்டு அறிவிக்கிறாய் போலும்.

817. ஸ்நாதா பதாவநி சிரம் பரிபுஜ்ய முக்தா
பாதேந ரங்கந்ருபதே: சுபலக்ஷணேந
ரேகாந்தரை: நவநவை: உபசோபஸே த்வம்
ஸம்ஸ்கார சந்தந விலேபந பங்க லக்நை:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காப்பாற்றும் பாதுகையே! சுபமான பல அடையாளங்கள் கொண்ட ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் இருந்து, ஸஞ்சாரம் முடிந்தவுடன் உன்னைக் கழற்றி, உன்னை நீராட்டுகின்றனர். உனக்குக் குளிர்ச்சியும் வாசனையும் உண்டாகும் விதமாக சந்தனம் பூசுகின்றபோது, அந்த சந்தனரேகைகள் புதிதாக வேறு கோடுகள் உருவாக்கியபடி நீ உள்ளாய்.

818. பக்த்யா முஹு: ப்ரணமதாம் த்ரிதசேச்வராணாம்
கோடீர கோடிகஷணாத் உபஜாயமாநை:
ஆபாதி சௌரி சரணாத் அதிகாநுபாவா
ரேகாசதை: தவ பதாவநி காபி ரேகா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! பக்தி காரணமாக தேவர்கள் உன்னை அடிக்கடி வணங்குகின்றனர். இதனால், அந்த க்ரீட முனைகளால் உன் மீது நூற்றுக்கணக்கான கோடுகள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைக் காட்டிலும் அதிகமான கோடுகள் உனக்கு உள்ளது என்னும் உனது பெருமை விளங்குகிறது.

819. பாதாவநி ப்ரதிபதம் பரமஸ்ய பும்ஸ:
பாதாரவிந்த பரிபோக விசேஷயோக்யா
ஸ்வாபாவிகாந் ஸுபகபக்தி விசேஷ த்ருச்யாந்
ரேகாத்மகாந் வஹஸி பத்ரலதா விசேஷாத்

**பொருள் -** ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் தாமரை மலர் போன்ற திருவடிகளின் அனுபவத்திற்கு ஏற்றவளாக நீ உள்ளாய். இதனால் இயற்கையாகவே உன் மீது அமைந்துள்ள ரேகை உருவத்தில் இலை, கொடி போன்றவற்றை நீ தரிக்கிறாய் போலும்.

**விளக்கம் -** நாயகன் நாயகியுடன் இன்பமாக இருக்கும்போது நாயகியின் கன்னம், தோள் போன்றவற்றில் மீன், இலை போன்ற வடிவங்களை நாயகன் வரைவது இயல்பாகும். இதற்கு மகரிகாபத்திரம் என்று பெயர். நாயகனான திருவடியுடன் இணைந்து நிற்கும் காலத்தில், இதே உருவங்கள் பாதுகையில் உள்ளன என்கிறார்.

820. ரேகா அபதேசத: தவம்
ப்ரசமயிதும் ப்ரளய விப்லவ ஆசங்காம்
வஹஸி மதுஜித் பதாவநி
மந்யே நிகமஸ்ய மாத்ருகா லேக்யம்

**பொருள் -** மது என்ற அசுரனை அழித்த ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! ப்ரளய காலத்தில் வேதங்கள் அழித்துவிடுமோ என்ற சந்தேகம் சிலருக்கு உண்டாகலாம். இதனால் அந்த சந்தேகத்தை நீக்கும் விதமாக உன்னில் காணப்படும் கோடுகள் என்பதன் மூலம், வேதங்களின் ப்ரதியை நீ வைத்துக் கொண்டுள்ளாய் என்பதை உணர்த்துகிறாய் போலும்.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
ரேகா பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்


**Email:**sridharan_book3yahoo.co.in